# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1888/42 - 2014 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2014.11.14

*1888/42 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாண விவசாய, கமநல அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம், கைத்தொழில், சுற்றாடல், கலாசார மற்றும் கலை விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் உதய பிரபாத் கம்மன்பில ஆகிய நான், பின்வரும் நியதிச் சட்டத்தினால் விவரிக்கப்படும் மேல் மாகாணத்தின் மாகாண சபைக்கான 2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சிறு நீர்ப்பாசன நியதிச் சட்டம், 2014.08.19 ஆந் திகதியன்று மேல் மாகாணத்தின் சபை அங்கீகாரத்தின் பின்னர் 2014.10.21 ஆந் திகதி மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் அதற்காக வழங்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

உதய கம்மன்பில,
மேல் மாகாண விவசாய, கமநல அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம்,
கைத்தொழில், சுற்றாடல், கலாசார மற்றும் கலை விவகாரங்கள்
தொடர்பான அமைச்சர்.

மேல் மாகாண விவசாய, கமநல அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம்,
கைத்தொழில், சுற்றாடல் கலாசார மற்றும் கலை விவகாரங்கள் தொடர்பான அமைச்சு,
ஸ்ராவர்த்தி இல்லம்,
புனித மாகஸ் பிரனாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2014, நவெம்பர் 13.

**மேல் மாகாண 2014 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, சிறு நீர்ப்பாசன நியதிச் சட்டம்**

ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களினூடாகப் பாய்ந்தோடும் ஆறுகளுடன் தொடர்புடைய நீர்ப்பாசன வேலைத்திட்டங்கள் அல்லது மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தவிர்ந்த மேல் மாகாணத்தின் சகல சிறிய நீர்ப்பாசன வேலைத்திட்டங்களை திட்டமிடுதல், நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல் உட்பட சிறிய நீர்ப்பாசன வேலைகளை நிர்மாணித்தல், மறுசீரமைத்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல் என்பவற்றுடன் தொடர்பான சட்டத்தை நிறுவுவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது இணைந்த விடயங்களுக்காக ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குமான நியதிச் சட்டமாகும்.

இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் (453 ஆம் அதிகாரமாகிய) நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இயைபற்றதாகும்.

1. இந்நியதிச் சட்டம் 2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாண சிறு நீர்ப்பாசன நியதிச் சட்டம் என்றழைக்கப்படுவதோடு மேல் மாகாண ஆளுநரின் அனுமதி கிடைத்த திகதி முதல் இது வலுவுடையதாகும்.

*சுருக்கப் பெயர் மற்றும் அமுலாகும் திகதி.*

*I ஆம் பகுதி*

**மேல் மாகாணத்தின் நீர்ப்பாசன திணைக்களத்தினை நிறுவுதல் மற்றும் அதன் உள்ளடக்கம்**

*மாகாண நீர்ப் பாசன திணைக் களத்தை நிறுவுதல்.*

2. மேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்ற பெயரால் அழைக்கபடும் (இதில் இதற்கப்பால் திணைக்களம் என்றழைக்கப்படும்) ஒரு திணைக்களம் இதனால் நிறுவப்படுகின்றது.

*மாகாண நீர்ப் பாசனப் பணிப் பாளர்.*

3. (1) திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறுவகித்தல் மற்றும் செயற்படுத்தும் பணியை (இதில் இதற்கப்பால் மாகாண பணிப்பாளர் என்றழைக்கப்படும்) மேல் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் மீது பொறுப்பாக்கப்படுகின்றது. மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் திணைக்களத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருப்பதோடு அவர் ஆளுநரால் நியமிக்கப்படுவார்.

(2) இலங்கை பொறியியலாளர் சேவையில் கடமையாற்றும் அதிகாரி ஒருவரை ஆளுநரினால் மாகாண பணிப்பாளராக நியமிக்கப்படும்.

(3) மாகாண பணிப்பாளருக்கு மாகாண நீர்ப்பாசன விடயப்பொறுப்பு செயலாளரின் மேற்பார்வையின் கீழ் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் இருத்தல் வேண்டும்.

*மாவட்ட நீர்ப் பாசனப் பொறியியலாளர் களை நியமித்தல்.*

4. (1) இந்நியதிச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக மாவட்ட நீர்ப்பாசன அதிகாரிகளாக கடமையாற்ற குறித்த ஒரு எண்ணிக்கையிலான பொறியியலாளர்களை காலத்திற்கு காலம் நியமிக்க முடியும்.

(2) அவ்வாறு நியமிக்கப்படுகின்ற நீர்ப்பாசன அதிகாரிகள், மாகாண பணிப்பாளரின் கட்டளைகள் மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டதாக எவரேனும் ஒரு மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளருக்கு குறிப்பிடப்பட்டதாக வழங்கப்படும் அல்லது விதிக்கப்படும் ஏதேனும் அதிகாரம், பணி அல்லது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவோ, மேற்கொள்ளவோ முடியும்.

*II ஆம் பகுதி*

**மாகாணப் பணிப்பாளரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்.**

*மாகாணப் பணிப்பாளரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்.*

5. (1) மாகாணப் பணிப்பாளருக்கு பின்வரும் அதிகாரங்கள் உண்டு :-

(அ) சகல சிறு நீர்ப்பாசன வேலைகளையும் திட்டமிடுதல், நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் ;

(ஆ) மாகாணத்தினுள் சிறு நீர்ப்பாசன வேலைகளை புனர் நிர்மாணம் செய்தல், செயற்படுத்துதல் மற்றும் நடாத்திச் செல்லுதல் ;

(இ) மாகாணத்தினுள் ஆற்று நீர் மற்றும் உவர் நீர் உள்தள்ளலை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;

(ஈ) மாகாணத்தினுள் சிறு நீர்ப்பாசன வேலைகளை பாதுகாத்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல் தொடர்பான நீர்ப்பாசன விடயங்கள் தொடர்பாக அறிவூட்டுதல், ஊக்குவித்தல் மற்றும் தூண்டல்களை வழங்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;

(உ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் விவசாயச் சங்கங்களின் பணிகள் மற்றும் செயற்பாடுகளை பற்றி குறித்த சங்கங்களுக்கு அறிவை வழங்குதல் ;

(ஊ) இச்சிறு நீர்ப்பாசனம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேவையான விவசாயச் சங்கங்களை தெரிவு செய்தல், நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் விவசாயச் சங்கங்கள் செயலற்ற நிலைக்கு உட்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அவற்றை செயற்படுத்தச் செய்தல் ;

(ஒ) சிறு நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமுல்படுத்தும் நிகழ்ச் சித்திட்டங்களில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் பிணக்குகளை தீர்ப்பதற்காக உரிய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

(2) இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஓர் சரத்தினாலும் பணிப்பாளருக்கு கிடைக்கப்பெற்றுள்ள சகல அதிகாரங்களும் பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். அதாவது பணிப்பாளரினால் மாகாண சிறு நீர்ப்பாசனங்களுக்கு உரிய ஏதேனும் ஓர் இயற்கை வளத்தையும் விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் ஏதேனும் ஓர் வர்த்தக நோக்கத்தில் பயன்படுத்துதல் அல்லது அதற்கு இடமளித்தல், ஏதேனும் ஓர் இயற்கை வளத்திற்கும் வர்த்தக நோக்கத்துடன் விலை விதித்தல் மேற்கொள்ளக்கூடாது.

சிறு நீர்ப்பாசன வேலைகளுக்கு பிரவேசிப்பதற்காக உள்ள அதிகாரம்.

6. (1) பணிப்பாளரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட எவரேனும் ஒருவருக்கு பணிப்பாளரினால் விதிக்கப்பட்ட நியமங்களை பின்பற்றிய பின் ஏதேனும் ஒரு சிறு நீர்ப்பாசன வேலை ஒன்றுடன் இணைந்ததாக உள்ள அல்லது அதற்கு அருகில் அமைந்த அல்லது அதற்கு நேரடியாக பிரவேசிக்க முடியுமான ஒரு வளாகத்திற்கு தேவைக்கு ஏற்ப எந்நேரத்திலும் பிரவேசிப்பதற்கான அதிகாரம் இருக்க வேண்டும்.

(2) இவ்வாறான ஒரு பிரவேசத்திற்கு நியாமற்ற வகையில் தடைகள் விதிக்கப்பட்டதும், அதிகாரமிக்கவரால் விதிக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப செயற்பட்டுள்ளமை மற்றும் அந்த நியமங்கள் சரியாகப் பின்பற்றப்பட்டுள்ளமை தொடர்பாக பணிப்பாளர் இணங்கிய நிலையில் குறித்த நீர்ப்பாசன வேலை வளாகத்திற்கு நுழைவதற்கான அனுமதியை வழங்கியதாக அல்லது அதிகாரம் வழங்கியதாக நீதவான் நீதிமன்றத்தில் கட்டளை ஒன்றை பெற பணிப்பாளரால் முடியும்.

வேறு அமைப்புக் களின் பங்கு பற்றல்.

7. பணிப்பாளரினால் முடிவு செய்யப்படும் நியதிகளுக்கு இணங்கியதாக சிறு நீர்ப்பாசன வேலைகளை நடாத்திச் செல்ல மற்றும் நிர்மாணிக்க பிறிதொரு அரச அல்லது அரச சார்பற்ற அல்லது தொண்டர் நிறுவனங்களின் பங்குபற்றலை ஊக்குவிக்க முடியும்.

## III ஆம் பகுதி

## குற்றங்களும் தண்டனைகளும்

சிறு நீர்ப்பாசன வேலைத்திட்டங் களுக்கு தடங்கல் களை, தடுப்புக் களை மேற் கொள்ளுதல் அல் லது அனுமதியின்றி சுற்றிவளைத்துக் கொள்ளுதல் என்பன குற்றமா கும் என்பது.

8. பணிப்பாளரின் முன் அனுமதி இன்றி :-

(அ) ஏதேனும் ஒரு நீர்ப்பாசன வடிகாலை, நீர் பாய்ந்தோடும் கால்வாய் ஒன்றை அணை ஒன்றை, கரை ஒன்றை, கரை ஒன்றை, அணைக்கட்டு ஒன்றை, ஒதுக்கக் குளம் ஒன்றை, காப்பு நீர்ப்பாசன திட்டம் ஒன்றை அல்லது பிறிதொரு நீர்ப்பாசன வேலை ஒன்றுக்கு தடங்கல்களை, தடுப்புக்களை ஏற்படுத்தக்கூடிய அல்லது அனுமதியின்றி சுற்றிவளைத்துக் கொண்ட அல்லது நட்டத்தை விளைவிக்க கூடிய அல்லது அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ;

(ஆ) ஏதேனும் ஒரு சிறு நீர்ப்பாசனத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நீரை ஏதேனும் ஒரு விதத்தில் வேண்டுமென்றே அல்லது சேதம் விளைவிக்கும் நோக்கில் விரயமாக விடக்கூடிய ;

(இ) ஏதேனும் ஒரு கழிவு அல்லது அசுத்தமாகக்கூடிய பொருட்களை ஏதேனும் ஒரு சிறு நீர்ப்பாசனத்துக்கு விடுவித்த அல்லது விடுவிப்பதற்கான ஏற்பாடுகள், தக்க வைக்கும் அல்லது விடுவிப்பதற்கான தக்கவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய ;

(ஈ) ஏதேனும் சிறு நீர்ப்பாசன வேலை ஒன்றில் அல்லது சிறு நீர்ப்பாசன கைத்தொழிலுக்கு வேறாக்கப்பட்டுள்ள ஒரு காப்புப் பிரதேசம் ஒன்றில் ஏதேனும் ஒரு பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் அல்லது மணல், மண் அல்லது பிறிதொரு பொருள் அகழ்வை மேற்கொள்ளும் அல்லது பயிர்ச்செய்கையை மேற்கொள்ள அல்லது மணல், மண் அல்லது பிறிதொரு பொருள் அகழ்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கக்கூடிய ;

(உ) அரச பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பு நடவக்கைகளுக்காகவன்றி வேறு செயற்பாடு ஒன்றுடன் தொடர்பான ஏதேனும் சிறு நீர்ப்பாசனம் வேலை ஒன்றில் போக்குவரத்துக்காக பொறி மூலம் இயக்கக்கூடிய ஏதேனும் போக்குவரத்துச் சாதனம் ஒன்றை ஓட்டிச் செல்லும் ;

(ஊ) ஏதேனும் ஒரு சிறு நீர்ப்பாசன வேலை ஒன்றில் ஏதாயினும் ஒரு வர்த்தக ரீதியிலான செயற்பாடொன்றில் ஈடுபடுதல் அல்லது அவ்வாறான சிறு நீர்ப்பாசன வேலை ஒன்றை அனுமதியற்ற செயற்பாடொன்றுக்கு பயன்படுத்தும் ;

(ஏ) ஏதேனும் ஒரு நீர்ப்பாசன வேலை ஒன்றில் அல்லது அதன் ஒரு பகுதியின் கட்டமைப்பிற்கு சேதம் விளைவிப்பது அல்லது சேதம் விளைவிப்பதற்கான ஏற்பாடுகளை செய்யும் அல்லது அவ்வாறான கட்டமைப்பொன்றை நீக்கும் அல்லது அதில் ஒரு பகுதியை நீக்கும் அல்லது நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஒருவர் இந்நியதிச் சட்டத்தின்படி குற்றம் ஒன்றிற்கு குற்றவாளியாகுவார்.

மாகாண பணிப் பாளரினால் இலகுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல.

9. (1)எவரேனும் ஒருவர் மேற்படி 8 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறியதாக நடந்து கொள்வதாக பணிப்பாளர் கண்டுகொள்ளும் பட்சத்தில் அந்தச் சரத்தில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடொன்றை அல்லது செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்வதில் இருந்து தவிர்ந்து கொள்ளுமாறு குற்றம் விளைவித்தவருக்கு வழங்கக்கூடிய எழுத்துமூல ஆணையொன்றை பணிப்பாளரினால் உடனே பிறப்பிக்க வேண்டும். கஷ்ட நஷ்டங்களை குறைத்துக் கொள்வதற்காக குறித்த நபரினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை குறித்த ஆணையில் குறிப்பாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளரினால் மேற்குறிப்பிட்ட (1) ஆவது உப சரத்தின்கீழ் செய்யப்பட்ட ஆணைக்கு இணங்கியதாக நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் செயற்பாட்டிற்காக குறித்த ஆணை பிறப்பிக்கப்பட்டதும் யாதாயினும் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட ஏதேனும் ஒரு நீர்ப்பாசன வடிகால், நீர்பாய்ந்தோடும் கால்வாய் ஒன்று, அணை ஒன்று, கரை ஒன்று, அணைக்கட்டு ஒன்று அல்லது ஒதுக்கக் குளம் ஒன்று, காப்பு நீர்ப்பாசன திட்டம் ஒன்று என்பவற்றுடன் தொடர்பானதாயின் குறித்த அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் மேற்குறித்த ஆணையை நடைமுறைப்படுத்த பொறுப்பாவார்.

பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை பின் பற்றாத பட்சத்தில் நீதிமன்ற நடவடிக் கைகளை மேற் கொள்ளுதல்.

(3) மேற்குறிப்பிடப்பட்ட (1) ஆம் உப சரத்தில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள நபரினால் தவறுகள் மிக்க விளைவுகளை குறைத்துக்கொள்வதற்காக ஆணையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போனபடிக்கும் குறிப்பாக குறிப்பிடப்பட்ட தவறுகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றமையை சுட்டிக் காட்டியதாக பணிப்பாளரினால் இறுதி ஆணையொன்றை பிறப்பிக்க வேண்டும் என்பதோடு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சாட்சியங்களாகும்.

(4) மேற்குறிப்பிட்ட (1) ஆவது உப சரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆணைக்கு இணங்கியதாக செயற்பட தவறும் எவரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்றை விளைவிப்பதோடு அவர் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் அவரை ஒரு இலட்சம் ரூபாவிலும் விஞ்சாத தண்டப்பணத்திற்கு அல்லது ஒரு வருட காலத்திற்கு விஞ்சாத காலத்திற்கு சிறைத்தண்டனைக்கு அல்லது தண்டப்பணம் மற்றும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

அதிகாரமிக்க உததியோகத்தர் கள் சமாதான உத்தியோகத்தர் களாக கருதப்பட வேண்டும் என்பது.

(5) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு ஆணையின் கீழ் ஏதேனும் ஒரு தவறை புரிகின்ற எவரேனும் ஒருவரை யாதாயினும் சிறு நீர்ப்பாசன வேலை உள்ள பிரதேசத்தில் பிடி ஆணை இன்றி கைது செய்யவும் நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதவான் ஒருவரின் முன்னிலையில் அவரை சமர்பிக்கவும் அதிகாரம் உள்ள உத்தியோகத்தருக்கு அதிகாரம் உண்டு.

(6) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு ஆணையின் கீழ் ஏதேனும் ஒரு குற்றத்தை மேற்கொள்ளப்பட்டிருக்கும் பட்சத்தில் அந்தக் குற்றத்தை செய்ய பயன்படுத்திய ஏதேனும் ஒரு பொருளை பறிமுதல் செய்யவும் நீதவானினால் முடிவு செய்யப்படும் விதத்திலான ஒரு இடத்தில் வைத்துக்கொள்ளவும் முடியும்.

## IV ஆம் பகுதி

### பொது ஏற்பாடுகள்

விவசாயச் சங்கங் கள், ஆலோசனை களுக்கு ஏற்ப செயற்பட வேண் டும் என்பது.

10. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அளவிற்கு பணிப்பாளரினால் விவசாயச் சங்கங்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

(2) விவசாயச் சங்கங்களினால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தினால் பணிப்பாளருக்கு தனது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது போகும் பட்சத்தில் விவசாய மக்கள் சேவைகள் திணைக்களத்தின் நாயகத்தின் உடன்பாடு மற்றும் அச்சட்டமூலத்திற்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

11. (1) எவரேனும் ஒருவர் கால்வாய் ஒன்றிற்கு, சிறு நீர்ப்பாசனம் ஒன்றிற்கு அல்லது நீர் பாய்ந்தோடும் வழி ஒன்றை தடுக்கும் அல்லது அனுமதியின்றி வளைத்துப்பிடிக்கும் அல்லது அவ்வாறானதொன்றுக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலான செயற்பாடொன்றை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் குறித்த நபருக்கு வழங்கப்படும் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றினால் குறித்த அறிவித்தலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த ஒரு காலத்திற்குள் குறித்த தடங்களை அல்லது அனுமதியின்றி வளைத்துப் பிடித்தலை நீக்கிக்கொள்ளுமாறு அல்லது நிறுத்திக்கொள்ளுமாறு விதிப்பது சட்டபூர்வமானதாகும்.

உத்தியோகத்தர் களுக்கு தடைகளை ஏற்படுத்துதல்.

(2) (1) ஆவது உப சரத்தின் கீழ் அறிவித்தல் ஒன்றை பெற்ற ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் குறித்த அறிவித்தலின் நியமங்கள் பிரகாரம் நடவக்கைகளை மேற்கொள்ள மறுக்கும் பட்சத்தில் அல்லது மேற்கொள்ளத் தவறவிடும் பட்சத்தில் அல்லது குறித்த அறிவித்தலை சமர்ப்பிக்க வேண்டிய நபர் யார் என்பது பற்றிய சந்தேசம் இருக்கும் பட்சத்தில் பணிப்பாளரினால் குறித்த தடையை அல்லது அனுமதியின்றிய வளைத்துக் கொள்ளலை உடனடியாக அகற்றுவதற்கு அல்லது நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்டரீதியானதாகுவதோடு பணிப்பாளரினால் குறித்த செயற்பாட்டிற்காக தேவைப்படும் ஏதேனும் ஒரு காணிக்கு அல்லது வளாகத்திற்கு நுழைந்து குறித்த அப்புறப்படுத்தலை அல்லது தடுத்தலை மேற்கொள்வதற்கான தேவைப்படும் சகல விடயங்களையும் மேற்கொள்ள அல்லது மேற்கொள்ளச் செய்தல் சட்டரீதியானதாகும்.

(3) பதில் கடமைக்காக பணிப்பாளரினால் எழுத்துமூலம் பெயர் குறிப்பிடப்படும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் இந்நியதிச் சட்டத்தின் 9 ஆவது சரத்தின் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள பணி ஒன்றை மேற்கொள்ளவதற்காக அதிகாரம் மிக்க அதிகாரி ஒருவராகுதல் வேண்டும்.

## V ஆம் பகுதி

## ஆணைகளை பிறப்பித்தல்

12. (1) நியதிச் சட்டத்தின்ன ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தேவையான ஏதேனும வியடம் ஒன்றுடன் தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் 5, 6, 7, 11 எனும் சரத்துக்களின் கீழ் அமைச்சரினால் ஆணைகளை பிறப்பிக்க முடியும்.

அமைச்சரினால் ஆணைகளை தயாரிக்க முடியும் என்பது.

(2) அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் சகல ஆணைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். அவ்வாறு பிரசுரிக்கப்படும் சகல ஆணைகளும் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் அல்லது அதில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள பிறிதொரு நாளில் இருந்து வலுவுடையதாகுதல் வேண்டும்.

(3) அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் சகல ஆணைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் முடிந்தளவு விரைவில் அனுமதிக்காக மாகாண சபைக்கு முன்வைக்க வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெறாத ஏதேனும் ஒரு ஆணை அத்தினத்தில் இருந்து அதனடிப்படையில் முன்னர் செய்த எந்தவித செயற்பாட்டிற்கும் பாதிப்புக்கள் எதுவுமின்றி இரத்தாக்கப்பட்ட ஒன்றாக கருதப்பட வேண்டும்.

(4) ஆணையொன்றை அவ்வாறு இரத்தாக்கப்பட்டதாக கருதப்படும் திகதியை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

## VI ஆம் பகுதி

## பொருள்கோடல்

13. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள் தொடர்பாக பிறிதொரு அர்த்தம் தேவைப்பட்டாலேயொழிய-

பொருள்கோடல்.

"ஆளுநர்" என்பதால், அரசியலமைப்பின் பிரகாரம் மேல் மாகாணத்தின் ஆளுநராக நிலவும் காலத்தில் பதவி வகிக்கும் நபரை குறிக்கும் ;

"அமைச்சர்" என்பது, சிறு நீர்ப்பாசன முறைமைகள் தொடர்பான விடயப் பொறுப்பு மாகாண அமைச்சர் குறிக்கப்படுகின்றார் ;

"செயலாளர்" என்பது, சிறு நீர்ப்பாசன வேலைத்திட்டம் தொடர்பான விடயம் பொறுப்பாக்கப்பட்டுள்ள மாகாண அமைச்சரின் அமைச்சின் செயலாளரை குறிக்கும் ;

"பொலிஸ் மற்றும் பொதுமக்களின் சமாதானம்" என்பது, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது உப அட்டவணையின் I ஆவது சரத்தில் வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணமே குறிக்கப்படும்.

"நீர்ப்பாசனம்" என்பதால் ஒரு மாகாணத்திற்கு மேற்பட்ட மாகாணங்களினூடாக பாய்ந்தோடும் ஆறுகளுடன் தொடர்பான நீர்ப்பாசன வேலைத்திட்டங்கள், மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன வேலை செயற்பாடுகள், காணி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தவிர்ந்த மேல் மாகாணத்திற்குள் மேற்கொண்டு செல்லப்படும் வேறு ஏதேனும் நீர்ப்பாசன வேலை குறிக்கப்படும் ;

" நீர்ப்பாசன வேலை" என்பதனால் இருநூறு ஏக்கர் வரையிலான விவசாயக் காணி ஒன்றிற்கு நீர் வழங்கப்படும் நீர்ப்பாசன வேலை ஒன்று குறிக்கப்படும் ;

நீர்ப்பாசன வேலை என்பதற்கு,

(அ) சிறு நீர்ப்பாசன வேலை ஒன்று தொகுதியாக்கப்படும் அல்லது அதற்கு விகிதமாக்கப்படும் அல்லது உடன் தொடரும் ஏதேனும் ஒரு குளம், அணைக்கட்டு, கால்வாய், கிளை நீர்ப் பாதைகள் ;

(ஆ) சிறு நீர்ப்பாசன வேலை ஒன்றை நிர்மாணித்தல், அல்லது நடாத்திச் செல்லுதல் தொகுதியாக்கப்படும் அல்லது அதற்கு விகிதமாக்கப்படும் அல்லது உடன் தொடரும் ஏதேனும் ஒரு செயற்பாடொன்று ;

(இ) பயிர் செய்யப்பட்ட யாதாயினும் ஒரு பிரதேசத்துக்கு உவர் நீரை பாய்ந்தோடச் செய்தல் அல்லது குறித்த பிரதேசத்துக்கு உவர் நீர் வந்து சேர அல்லது அதிலிருந்து வெளியேறிச் செல்வதை தடுப்பதை முறையாக்குதல் மற்றும் அவ்வாறான பிரதேசத்தினை வெள்ளப்பெருக்கிலிருந்து காப்பதற்கு கட்டப்பட்ட ஏதேனும் ஒரு கட்டுமானத் தொழிலை திட்டமிடுதல், நிர்மாணித்தல், நடாத்திச் செல்லுதல், புனர் நிர்மாணம் செய்தல் உள்ளடங்கும் ;

"சிறு நீர்ப்பாசன வேலைத்திட்டம்" என்பதால் சிறு நீர்ப்பாசன நடவடிக்கைகளுடன் தொடர்பான சிறு நீர்ப்பாசன வேலைத்திட்டங்கள் மற்றும் இயற்கை நீர் பாய்ந்தோடும் வழிகளை குறிக்கும்.

"மாசடைதல்" என்பது, சூழலில் யாதாயினும் ஒரு பகுதியில் பௌதிக வெப்ப, இரசாயன அல்லது உயிரியில் கதிர்த்தன்மை அதன் சிறந்த பயன்பாட்டிற்கு கேடு விளைவிக்கும் வகையில் பொதுமக்களின் சுகாதாரத்திற்கு, பாதுகாப்பிற்கு அல்லது சக வாழ்விற்கு அல்லது விலங்குகள், பறவைகள், நீர் வாழ் உயிரினங்கள் அல்லது சூழலுக்கு ஆபத்து விளைவிக்கும் அல்லது அவ்வாறான நிலை ஒன்றை தோற்றுவிக்கக்கூடிய வகையில் கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல் அல்லது சேகரித்தல் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ மாற்றத்தை ஏற்படுத்துவதை குறிக்கும்.

"நீர் வழி" என்பதால், நீர் வடிந்தோடுவதற்காக இயற்கையாக தோன்றியுள்ள மாகாணத்திற்கு உட்பட்ட ஆறொன்று, கிளை ஆறொன்று குளம் ஒன்று அல்லது கால்வாய் ஒன்றை குறிக்கும்.

"மாகாணம்" என்பது, மேல் மாகாணத்தைக் குறிக்கும்.

11- 883

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.